# யாழ் தமிழ் & வரலாறு Shortcuts - Part 1

**Shortcuts** அனைத்துமே படிப்பதற்காக மட்டுமே…! யார் மனதையும் புண்படுத்துவதற்காக அல்ல. எனவே யாரும் தவறாக எண்ண வேண்டாம்…!

இது போல் இன்னும் வாரவாரம் **Facebook & Whatsapp** ல் பதிவிடும் **Shortcut** களை தொகுத்து **PDF** ஆக பதிவிடுகிறோம்…!

எங்களின் **Youtube** வகுப்பில் இணைய இங்கு **Click** செய்யவும். அல்லது **www.yaazhl.com** இல் செல்லவும்.

## தமிழ்

1. பெரியார் நடத்திய இதழ்கள்
   - குடியரசு
   - விடுதலை
   - புரட்சி
   - ரிவோல்ட்(Revoult) ஆங்கில இதழ்

***Shortcut :*** ஐயா பெரியவரே குடிய விடு புரட்சி வேல எடு..!

***Shortcut Explain :*** ஐயா பெரியவரே(பெரியார்) குடிய (குடியரசு) விடு (விடுதலை) புரட்சி (புரட்சி) வேல (ரிவோல்ட்) எடு..!

2. தாராசுரம் கோவிலை கட்டியவர் - இரண்டாம் இராஜ இராஜ சோழன்

   ஆனால் Options ல முதலாம் இராஜ இராஜ சோழன் இருந்த கண்டிப்பாக சிலருக்கு குழப்பும். அதுக்கான ***Shortcut :*** இராஜவுக்கு இரண்டாம் (இரண்டாம் இராஜ இராஜ சோழன்) தாரம் (தாராசுரம் கோவில்)

3. இலக்கணத்தில் உயிரளபெடை மூன்றை நினைவில் வைக்க..!

   **உயிரளபெடை விளக்கம் :**

   a. உயிர் குறில் வந்தால் - செய்யுளிசை அளபெடை (கெடா**அ**ர், விடா**அ**ர்)
   b. ம்ம் ங்ங் வந்தால் - இன்னிசை அளபெடை (கெடுப்ப**தூஉ**ம், எடுப்ப**தூஉ**ம்)
   c. **இ** என முடிந்தால் - சொல்லிசை அளபெடை(தழி**இ**ய)

***Shortcut :*** உயிர்க்குறில் (உயிர் எழுத்து குறில்) செய்தவனுக்கு (செய்யுளிசை அளபெடை)

ஒரு மாங்காய் (ம்ம்ங்ங்) இனித்ததாம் (இன்னிசை அளபெடை)

**இ**தை (இ என முடிந்தால்) ஊரெல்லாம் சொல்லிவிட்டான் (சொல்லிசை அளபெடை)

4. வள்ளலார் எழுதிய பாடல்களின் எண்ணிக்கை - 5818
    a. ***Shortcut :*** அஞ்சாமல் (5) எட்டு (8) வச்சா ஒரே (1) எட்டில் (8) வள்ளல் ஆகலாம்..!

5. பதிற்றுப்பத்தில் பாடல் பாடிய புலவர்களின் பெயர்கள். முதல் பத்தும் கடைசி பத்தும் கிடைக்க வில்லை எனவே 2 முதல் 9 ஆம் பத்து பாடிய புலவர்களின் பெயர்கள் வரிசையாக நினைவில் வைக்க

    2 ம் பத்து - குமட்டூர் கண்ணனார்
    3 ம் பத்து - பாலைக் கௌதமனார்
    4 ம் பத்து - காப்பியாற்றுக் காப்பியனார்
    5 ம் பத்து - பரணர்
    6 ம் பத்து - காக்கை பாடினியார்
    7 ம் பத்து - கபிலர்
    8 ம் பத்து - அரிசில் கிழார்
    9 ம் பத்து - பெருங்குன்றூர்கிழார்

***Shortcut :*** கண்ணன் பாலை வைத்து காப்பி போடும் போது பரணின் மேலே இருந்த காக்கா பில்லர் மேல இருந்த அரிசியை குன்று மேல தள்ளிவிட்டது.

***Shortcut Explanation :*** கண்ணன் (குமட்டூர் கண்ணனார்) பாலை (பாலைக் கௌதமனார்) வைத்து காப்பி (காப்பியாற்றுக் காப்பியனார்) போடும் போது பரணின் மேலே (பரணர்) இருந்த காக்கா (காக்கை பாடினியார்) பில்லர் (கபிலர்) மேல இருந்த அரிசியை (பெருங்குன்றூர்கிழார்) குன்று மேல தள்ளிவிட்டது.

6. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர்களை நினைவில் வைக்க..
    1. திருமலையர்
    2. மல்லர்
    3. காளிங்கர்
    4. தாமத்தர்
    5. தருமர்

6. பரிப்பெருமாள்
7. பரிமேலழகர்
8. பரிதி
9. மணக்குடவர்
10. நச்சர்

***Shortcut :*** மலையில் மல்லுக்கட்டும் காளிக்கு தாமதமாக தருமம் செய்யப் போகும் போது, பெருமாளும் அழகரும் வந்து பாதி குடம் பங்கு குடுன்னு நச்சரிக்கிறாங்க..!

.

***Shortcut Explanation :*** மலையில் (திருமலையர்) மல்லுக்கட்டும் (மல்லர்) காளிக்கு (காளிங்கர்) தாமதமாக (தாமத்தர்) தருமம் (தருமர்) செய்யப் போகும் போது, பெருமாளும் (பரிப்பெருமாள்) அழகரும் (பரிமேலழகர்) வந்து பாதி (பரிதி) குடம் (மணக்குடவர்) பங்கு குடுன்னு நச்சரிக்கிறாங்க..! (நச்சர்)

7. மலரின் ஏழு பருவங்கள்
   1. அரும்பு
   2. மொட்டு
   3. முகை
   4. மலர்
   5. அலர்
   6. வீ
   7. செம்மல்

***Shortcut :*** இராமராஜன் பாடல் அரும்பாகி மொட்டாகியை நினைத்துக் கொள்ளுங்கள்.

அரும்பாகி மொட்டாகி முகையாகி
மலர் ஆகி அலர் ஆகி வீ ஆகி
பாட்டு எப்படி செம்மையாக(செம்மல்) இருக்கா..!..?

# வரலாறு

1. பாபரின் போர் நிகழ்வுகளை வரிசையாக நினைவில் வைக்க
    - முதல் பானிபட் போர் - 1526
    - கான்வா போர் - 1527
    - சந்தேரி போர் - 1528
    - காக்ரா போர் - 1529

வருடத்திற்கு Shortcut : முதல் பானிபட் போர் - 1526 - (பானி என்றால் இந்தியில் தண்ணீர் என்று அர்த்தம் 1526 ல் இரண்டு ஆத்து தண்ணிய பாரு(பாபர்) அப்படி நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்) இதிலிருந்து ஒவ்வொரு ஆண்டாக கூட்டி எழுதிக் கொள்ளுங்கள்.

வரிசைக்கு Shortcut : பாகன் சந்தையில் காக்கா விற்க போறான்.

பாகன் பா - பானிபட் & கன் - கன்வா போர்

சந்தை - சந்தேரி போர்

காக்கா - காக்ரா போர்

2. அல்போன்ஸா-டி-அல்புகர்க்கு கோவாவை கைப்பற்றிய ஆண்டு - 1510

Shortcut : அஞ்சுக்கும் (5) பத்துக்கும் (10) ஆசப்பட்டு கோவிச்சு (கோவா) கிட்டயே அல்புகர்க்கு..!

www.yaazhl.com